நமக்கான சினிமாவைத் தேடி

முழுதாக ஒரு மூன்றுகிழமை தமிழ்நாட்டில் தங்கி யிருந்தேன். சென்றதற்கு ஒரு நோக்கம் இருந்தது. 'ஈழத் தமிழருக்கான ஒரு சினிமாவை கண்டடைதல்' என்கிற நோக்கம்.

இதற்கு எனக்கு என்ன தகுதி இருக்கிறது என்று யாரும் கேட்டால் என்ன பதில் சொல்வேன்? சினிமா ஆர் வலன் அவ்வளவும் தான் சொல்ல முடியும்?. ஈழத்துத் தமிழ்ச் சினிமா தொடர்பான அக்கறையும் ஒரு காரணம் என்பேன்.

இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னர் ஈழத்துத் தமிழ்ச் சினிமா குறித்து ஈழமுரசு பத்திரிகையில் 'செல்லும் வழி இருட்டு' என்று தொடர் கட்டுரை எழுதினேன். அதில் பலதும் பற்றித் தொட்டிருந்தேன். எனது இந்த பயணத்துக்கு அந்தக் கட்டுரையும் ஒரு காரணம்.

ஈழத்து தமிழ்ச் சினிமாவைக் கண்டடைவதற்கு ஏன் தமிழ் நாடு என்ற ஒரு கேள்வியும் எழலாம். முக்கியமாக தமிழ் மொழி பேசும் திரைப்படக் கலைஞர்கள் அங்கு இருக் கின்றனர் என்பது ஒன்று.

படிப்பும், அதற்குரிய பயிற்சியும் இல்லாமல் யாரும் பரதநாட்டியம் ஆடுவார்களா? படம் எடுக்க வெறும் பணமும் ஆர்வக் கோளாறும் இருந்தால் போதும் என்று நினைக்கிறார்கள்.

இரண்டாவதாக திரைப்படம், தொழில் முறையில் சிறப் பாக செழித்து வளர்ந்த இடம் தமிழ் நாடு என்பதும் ஒரு காரணம். மற்றும் ஈழத்துத் தமிழர்களாகிய எங் களால் சுலபமாக திரைப்படக் கலைஞர்களை சந்திக்கலாம் அளவளாவலாம் என்றால் அதுவும் தமிழ் நாட்டிலே சாத்தியம்.

சுமார் முப்பது தமிழ்த்திரைப்படக் கலைஞர்களைச் சந்தித் தோம். அவர்கள் பல தரப்பட்டோர் ஆவர். சிகை அலங் காரக் கலைஞர், நெறியாளர், ஒளிப்பதிவாளர், வசன கர்த்தா, பாடலாசிரியர், சினிமா நிருபர், நடிகர், கலைக் கூடப் பொறுப்பாளர், உதவி நெறியாளர்கள் வீதியில் அலைகிற சினிமா ஆர்வலர்கள் (இந்த ஆர்வலர்கள் இரு வகை, பங்காளராகத் துடிப்பவர்கள், பார்வையாளர் களாக இருப்பவர்கள்) ஒப்பனையாளர், நடனக் கலை ஞர், தயாரிப்பாளர்... என்று இன்னும் பலதரப் பட்டோரைச் சந்தித்தோம்.

கண்களில் வெறி, கண்களில் ஒளி, சாதிக்க வேண்டும் என்ற துடிப்பு, சாதிக்கும் ஆர்வம் என்று எல்லோர் முகங் களிலும் அவைதான் தெரிந்தன. பட்டினி; படுக்கைக்கு இடமில்லை. என்றாலும் வாழ்க்கையில் எவ்வளவு ஆர்வம் நம்பிக்கை. சென்னைக்கு தினமும் நூறு பேரா வது சினிமாவில் சாதிக்க வேண்டும் என்ற வெறியோடு வருகிறார்கள். தினமும் நூறு பேர் எனில் மாதத்திற்கு அது மூவாயிரம் ஆகிறது. வருடக் கணக்கை நீங்களே பார்க்கலாம்.

இவர்களில் சாதிப்பவர்கள் எத்தனைபேர்? இவர்களில் மனச் சிகரங்களைத் தொடாவிடினும் மலை அடிவாரங் களுக்காவது வந்த பாலா, அமீர், மிஸ்கின் போன்று தேறியவர்கள் எத்தனை பேர்? நடிக்க என்று வந்து இயக் குனர்களாகவும் (பாரதிராஜா) இசையமைப்பாளர் களாகவும் (எம்.எஸ். விஸ்வநாதன்) இயக்குவதற்கு வந்து பாடலாசிரியர்களாகவும் (அறிவுமதி, ஆரூர்தாஸ் முத்து லிங்கம், யுகபாரதி) வசனகர்த்தாக்களாகவும் மாறிய விபத்துக்களும் இங்கு உண்டு.

தமிழ் திரைப்பட உலகை 'கனவுத் தொழிற்சாலை'என்று வர்ணித்து சுஜாதா ஒரு நாவலும் எழுதினார். உண்மை யில் கனவுகளைத் தின்று வாழ்பவர்கள் அங்கு அதிகம். சில கனவுகள் தின்று செமிபடுகின்றன. சில கனவுகள் வாந்தியாய் வெளிவருகின்றன. சில கனவுகள் காவியமாக மிளிர்கின்றன. (உதிரிப்பூக்கள், பருத்தி வீரன்)

இரவி அருணாசலம்

எழுதுவது என்னவெனில்

சுவாரசிமாய் நிறைய நடக்கின்றன. எங்கெங்கும் காற்று அலைதல் போல எல்லா இடங்களிலும் கதை சொல்லிகள் அலைகின்றனர். விடுதி அறைகளில் மாத்திரம் தான் இந்தக் கதை சொல்லிகள் அலைகிறார்கள் என்றல்ல கடற்கரையில் காற்று வாங்கி மாத்திரம்தான் கதை சொல்கிறார்கள் என்றும் அல்ல தொடரூந்து நிலையத்தில், உணவு விடுதியில், சாராயம் ஒழித்துக் குடிக்கிற ஓடையில்... கதை சொல்வதற்கு தோதான இடம் தேவையில்லை, நேரம், காலம், பொழுது எதுவும் தேவையில்லை. கதை கேட்பவர்கள் தயாரிப்பாளர்களாக மாத்திரம்தான் இருக்க வேண்டும் என்றும் இல்லை. அது யாரோ ஒருவராக இருக்கலாம். கதை பிடிக்கவில்லையா? "இருங்க சார் இன்னொரு கதை சொல்றன்" இன்னொரு கதை தயாராக இருக்கிறது. இல்லை இன்னும் ஆயிரம் கதை தயாராக இருக்கிறது. ஆயிரம் பேரிடம் ஆயிரம் கதைகள்.

சினிமாவை அவர்கள் யாகமாக வேள்வியாகப் பார்க்கி றார்கள். வாழ்வதற்கான வழியாகப் பார்க்கவில்லை. வயிறு பசித்த போதுதான் அல்ல வயிற்றுப்பசி தாங்க முடியாதபோதுதான் அவர்கள் அடுத்த வேலை பற்றி யோசிக்கிறார்கள். நீங்கள் ஓர் உணவு விடுதியில் உண்பதற்கு இருக்கிறீர்கள். உங்களை உபசரிக்கும் பரிசாரகர்களைக் கேட்டுப் பாருங்கள். அவர்கள் சொல் வார்கள் "ஆமா சார் சினிமாவுக்கு வந்தேன்" அவர்கள் கண்களைக் கவனித்துப் பாருங்கள், நம்பிக்கை ஒளி இன்னும் மிச்சம் வைத்திருக்கிறார்கள். "அதெல் லாம் வெல்லலாம் சார், இருந்து பாருங்க ஜெயித்துக் காட்டுறன்..."

அங்கு நிலைமை அப்படி இருக்கிறது. புலம் பெயர்ந்த தமிழர் இங்கு நாம் என்ன செய்கிறோம் 'மண்ணாங்கட்டி' படத்தை எடுத்துவிட்டு அதுதான் மகாகாவியம் என்று பீற்றிக் கொண்டு திரிகின்றோம். ஒன்றுக்கும் உதவாத சருகுகளை எடுத்து விட்டு 'பூக்கள்' என்று புழுகித் திரி கின்றோம். காதல் என்ற பெயரை வைத்துக் கொண்டே எத்தனை 'காவியங்கள்' பண்ணுகிறோம். அரசியையும் அபியையும் உருக்கித்தட்டி சித்ரா என்கிறோம்.

எதைச் சொன்னாலும் பொத்துக் கொண்டு கோபம்தான் வருகிறது. படிப்பும், அதற்குரிய பயிற்சியும் இல்லாமல் யாரும் பரதநாட்டியம் ஆடுவார்களா? படம் எடுக்க வெறும் பணமும் ஆர்வக் கோளாறும் போதும் என்று நினைக் கிறார்கள். இவர்கள் ஈழத்துத் தமிழ்ச் சினிமாவை அழிக்க வந்த 'சத்திராதிகள்' என்றுதான் சொல்வேன்.

உண்மையில் ஈழத்துத் தமிழ்ச் சினிமாவைக் கண்டடைதல் என்ற பயணத்தில் ஒரு சில அடிகள் அல்ல ஒரு சில அங்குலங்கள்தான் நகர்ந்திருக்கின்றோம். என்றாலும் அதுகூட இப்போது அவசியம் என்றுதான் படுகிறது. இந்தப் பயணத்தில் நேர்ந்த சில அனுபவங்களை இந்தப் பத்தியில் தொடர்ந்து எழுத ஆசை கொண்டேன். எழுதுவேன்.

அறிவியல் தகவல்கள்

சி.மாசிலாமணி
(ஒரு பேப்பருக்காக)

உலோகங்கள்

மூலகங்கள் என்று அழைக்கப்படும் 118 அடிப்படைப் பொருட்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து உருவானதுதான் இந்தப் பிரபஞ்சம். மூலகங்களில் அநேகமானவை உலோகங்கள். அவற்றின் பண்பு இவைதான் என்று விளக்கம் கொடுப்பதைவிட உலோகங்களில் ஒன்று இரும்பு என்று சொன்னாலே அவை பற்றிய பல பண்புகள் உங்களுக்குத் தெரிந்துவிடும்.

ஏடை கூடிய உலோகம் எதுவென்று கேட்டால், இரும்பு என்ற பதிலையே பலரிடமிருந்து எதிர் பார்க்கலாம். நாம் நாளாந்தம் உபயோகிக்கும் உலோகங்களில் அடுக்களை மூலகமான அலுமினியம் மட்டும்தான் இரும்பைவிட எடை குறைந்த மூலகம். நாம் சாதாரணமாக உபயோகிக்கும் மூலகங்களை எடை வரிசையில் ஒழுங்கு படுத்துவோமானால், அந்தவரிசை அலுமினியம், இரும்பு, நிக்கல், செப்பு, துத்தநாகம், வெள்ளி, தகரம், பிளாற்றினம், தங்கம், ஈயம் என்று அமையும். ஈயத்திற்கு அப்பால் உள்ள மூலகங்கள் கதிர் வீச்சு தன்மை கொண்டவையாக இருப்பதால் சாதாரண தேவைகளுக்கு உபயோகப் படுவதில்லை. மேலே குறிப்பிட்ட வரிசையில் கடசியாகக் குறிக்கப்படும் ஈயம் இரும்புபோல் 3.7 மடங்கு எடை கொண்டது. எமது அரிய மூலகமான தங்கம்கூட இரும்பைவிட மூன்றரை மடங்கு பாரம் கூடியது. ஆனால் பாரம் குறைந்த மூலகமான அலுமினியம் இரும்பின் அரை மடங்கு எடை கொண்டது.

இரு உலோகங்கள் இணைந்து உருவாகும் சில கூட்டு உலோகங்கள் சில விசேட பண்புகளைக் கொண்டவை. இப்படியான கூட்டால் உருவாகும் பொருளான உருக்குத்தான் எமது வாழ்விற்கு எத்தனை உதவியாக உள்ளது. சிறிது கரியுடன் இணையும் இரும்பு எவ்வளவு வையிரமான உருக்காக மாறுகிறது. அடுத்து இரு உலோகங்களின் கலவையான வெண்கலம் மூலம் உருவாகும் மணி ஓசை உலகின் எல்லாப் பாகங்களிலும் மணி உற்பத்திக்கு பயன்படுகிறது. மணி ஓசை எம் காதுகளில் கேட்காத ஊரே இல்லை.

எமது கலாச்சாரத்துடன் பின்னிப் பிணைந்த அணிகலன்களுடன் சம்பந்தப் படும் தங்கம்கூட செப்புடன் கலக்காவிட்டால் அது நகை செய்ய பயன்படாது. திறம் பவுண் என்று நாம் கருதும் 22 கரட் பவுண்கூட 2 கரட் செப்பை உள்ளடக்கியதுதான்.

வெள்ளைத் தங்கம் என்று நகைகளுக்கு உபயோகப் படும் உலோகம் கூட முக்கால் பங்கு தங்கமும் கால்பங்கு வெள்ளி அல்லது பலடியம் என்னும் இன்னுமொரு வெள்ளை உலோகத்தை உபயோகித்து உருவாக்குவதுதான். இந்த வெள்ளைத் தங்கம்கூட காலப்போக்கில் சற்று மங்கல் அடையத்தான் செய்கிறது.

எப்பவுமே ஒளி மங்காத நிலையில் வெள்ளை நகைக்கு ஆசைப் படுவோமா னால் நாம் பிளாற்றினம் என்னும் உலோகத்தைத்தான் உபயோகிக்க வேண்டும். ஆதன் விலைதான் அதிகம். பிளாற்றினத்தின் விலை தங்கத்தின் விலைபோல் இருமடங்கு.

பாஸ்ராஜ் அமரருக்கு

அமரரா
நீ மீட்ட ஆனையிறவு கண்ட
செங்கால் நாரைகள் போல்
வன்னியெங்கும்
தாயின் மணிக்கொடிகள்
பதிகின்றனவே.
என் கவிதையிலே நீ இருக்க
ஈழம் கதறியழும் நியாய மென்ன.

நீயோ முடங்கிய காலில்
மூண்டெறிந்த விடுதலைத் தீ.
தீவெட்டியாய் உன்னைச்
சுமந்து சென்ற தோழருக்கு
"இத்தாவில்" பகையிருட்டில்
வெற்றியின் பாதை விளங்க வைத்த
மாவீரா.

உன்னை எழுதாமல் இந்தத் தமிழ்
எதற்கு.
களம் களமாய்த் தோழர் உன்னைச்
சுமந்ததுபோல்
காலங்கள் ஊடே
என் கவிதை இனிச் சுமக்கட்டும்

அவனை ஆழப் புதைக்காதீர்
ஆலயங்கள் கட்டாதீர்.
நாளை மணலாற்றை மீட்டு
வாழ திரும்புகையில் நம் சனங்கள்
மசிரை விட்டுதுகள் தம்
மனம் நிறைந்த நாயகனை.
மணலாற்று அகதிகளின் புதையல்
ஆழப் புதைக்காதீர்.

- வ.ஐ.ச.ஜெயபாலன்

By Air or **By Sea** Weekly Sailings
TRY US and see the ***difference***

TRICO - *The name you can trust*

இலங்கை உட்பட 28 நாடுகளில் ட்ரைகோ 43 கிளைகள்
கொழும்பு காலி குருநாகலில் எமது சுங்க இணைக் களஞ்சியங்கள்

மிகக் குறைந்த செலவில் உங்களுக்கு சேவை செய்யக் காத்திருக்கிறோம்

*Bring your goods and do the packing in our warehouse itself, thereby saving money, **you spend on transporting.***

One T-Chest to **Sri Lanka - Only £10:** Transit Time Only **18 days**
Two T-Chests to **Chennai – Only £85:** Transit Time Only **27 days.**
Two T- Chests to **Cochin – Only £95:** Transit Time Only **27 days.**

Open 6 days a week!

TRICO
T: 020 8888 8787 F: 020 8889 5445
Email: dilan@tricoshipping.com
www.tricoshipping.com

Trico Shipping and Forwarding Ltd.
555 Whitehart Lane, London. N17 7RP